செ.வெ.எண்.193 நாள்.03.05.2017

## பத்திரிகை செய்தி

## உத்யோக் ஆதார் பதிவறிக்கை ஒப்புகை

குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள், தங்கள் உற்பத்தித் தொழில் அல்லது சேவைத் தொழிலை ஆரம்பித்த பிறகு, தாம் செய்து வரும் தொழிலை பதிவு செய்ய உத்யோக் ஆதார் பதிவறிக்கையை (Udyog Aadhaar Memorandum) சமர்ப்பித்து ஒப்புகை பெற மத்திய அரசு புதிய இணையதளத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. www.udyogaadhaar.gov.in எனும் இந்த இணையதளத்தில் தொழில் முனைவோர்கள் தமது ஆதார் எண், வங்கி கணக்கு மற்றும் தொழில் விபரங்கள் ஆகியவற்றை உள்ளீடு செய்து பதிவறிக்கை ஒப்புகையை உடனே பெறலாம். இதற்கு பதிவு கட்டணம் ஏதுமில்லை. பங்குதாரர் நிறுவனம் எனில் நிர்வாக பங்குதாரரின் ஆதார் எண்ணிலும், மற்ற நிறுவனங்கள், நிறுவனத்தின் உரிமையாளர், அல்லது அதிகாரமளிக்கப்பட்ட நபரின் ஆதார் எண்ணிலும் பதிவு செய்ய வேண்டும்.

MyMSME எனும் கைபேசி செயலி மூலமாகவும் மேற்குறிப்பிட்ட பதிவறிக்கை ஒப்புகை பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது.

முன்பு நடைமுறையில் இருந்த சிறு தொழில் சான்றிதழ், தொழில் முனைவோர் பதிவறிக்கை பகுதி–I மற்றும் பகுதிII ஆகியனவற்றை ஏற்கனவே பெற்றிருந்தாலும், குறு, சிறு, நடுத்தர தொழில் நிறுவனங்கள் உத்யோக் ஆதார் பதிவறிக்கையை சமர்ப்பித்து ஒப்புகையை பெற்றுகொள்ளுமாறு தொழில் முனைவோர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். புதியதாக தொழில் தொடங்க உத்தேசித்துள்ளவர்கள் இந்த பதிவறிக்கை ஒப்புகையை பெறக்கூடாது. ஏற்கனவே தொழில் ஆரம்பித்தவர்கள் மட்டுமே இந்த உத்யோக் ஆதார் பதிவறிக்கை ஒப்புகையை பெறலாம்.

கூடுதல் விபரங்களுக்கு மாவட்ட ஆட்சியர் வளாகத்திலுள்ள மாவட்ட தொழில் மைய பொது மேலாளரை அலுவலக வேலை நாட்களில் (தொலைபேசி எண். 044–27238837, 27236686, 27238551) தொடர்புகொள்ளுமாறு தெரிவிக்கப்படுகிறது.

செய்தி வெளியீடு – செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், காஞ்சிபுரம்.